# விலைமனுக்களுக்கான அழைப்பு

## குத்தகை அடிப்படையில் அலுவலக இடப்பரப்பின் பெறுகை

### வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

01. **மூன்று வருட காலத்திற்கு** வர்த்தக வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சிற்கு **"குத்தகை அடிப்படையில் ஓர் அலுவலக இடப்பரப்பின் பெறுகைக்காக"** தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கள் **தேசிய போட்டி விலைமனு முறைமையின்** ஊடாக நடத்தப்படும்.

03. கீழ்க்காணும் குறைந்தபட்ச தேவைப்பாடுகள் தேவைப்படுகின்றன.

**அமைவிடம் :**

கொழும்பு நகர பிரதேசம் அல்லது பத்தரமுல்ல, ராஜகிரிய பிரதேசத்திற்குள் பிரதான வீதி அல்லது பிரதான வீதியில் இருந்து கிட்டத்தட்ட 300 மீட்டர் அல்லது அதற்கு குறைவான தூரத்தில் விரும்பத்தக்கது.

**தேவைப்படும் இடவசதி :**

முழுமையான டைல் அல்லது டெராசோடனான பாவிக்கக்கூடிய தரைப்பிரதேசம், விஸ்தீரணம் 40,000 ச.அடி - 45,000 ச.அடிக்கு இடையில் வளிச்சீராக்கி வசதிகள் மற்றும் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்படுமாறு ஏனைய தேவைப்படும் வசதிகள்.

**வாகன நிறுத்துமிடம் வசதிகள் :**

கட்டிட இடப்பரப்பின் உட்புறம் வாகன நிறுத்துமிடமானது 30-40 அலுவலக வாகனங்களை அடக்கக்கூடியதாக இருத்தல்.

04. காசாக **ரூ. 20,000 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன்** பேரில் கொழும்பு **- 03, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, இல. 492, வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, நிதிப்பிரிவு, "M" மாடியிலிருந்து** விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். **2024 ஜனவரி 29 முதல் 2024 பெப்ரவரி 15வரை** வேலை நாட்களில் **மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00** இற்கு இடையில் விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். அத்துடன் www.trade.gov.lk **(Downloads Ministry Notifications)** இலும் கிடைக்கும்.

05. விலைமனுப் படிவம் பிரிவு IV இல் உள்ளடக்கப்பட்ட ஓர் விலைமனுப் பிணையை எல்லா விலைமனுவுடனும் இணைத்தல் வேண்டும்.

06. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 02 பிரதிகளில் **"மூலப்பிரதி"** மற்றும் **"நகல்பிரதி"** என்று குறிப்பிட்டு கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது **2024 பெப்ரவரி 16 பி.ப. 3.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்பு **"M" மாடி, வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சில்** வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"குத்தகை அடிப்படையில் அலுவலக இடப்பரப்பிற்கான பெறுகை"** என்று குறிப்பிடல் வேண்டும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்படும் நேரத்தின் பின் உடனடியாக விலை மனுக்கள் திறக்கப்படும்.

07. விலைமனுவுக்கு முன்னரான ஓர் கூட்டம் **2024 பெப்ரவரி 06ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, "M" மாடியில்** நடைபெறும். அத்துடன் விலைமனுவுக்கு முன்னரான கூட்டத்திற்கு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அழைக்கப்படுகின்றனர்.

08. அமைச்சு பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதியானதாக இருக்கும்.

09. மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து பிரதம கணக்காளரை 011-2100577 இல் தொடர்புகொள்ளுங்கள்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 492 ஆர்.ஏ.டி. மெல், மாவத்த,**
**கொழும்பு - 03**